Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# Ideological Status of Feminist Poets of the Sangam Period

**Dr. P. Ravindaran,** Assistant Professor of Tamil, Tamil Research Centre,
S.T. Hindu College, Nagercoil - 629002, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-9468-7314**
**DOI: 10.5281/zenodo.14744549**

## Abstract

*Sangam literature is a historical, literary, didactic and cultural source that describes the life of the Tamils. Because Sangam literature is the pride of the ancient Tamil society and culture. Sangam literature shares much information about the life of the Tamils, both internal and external lives. It tells about virtue, immorality, love, pleasure and nature. The Sangam poets have recorded their thoughts in their songs in a way that is suitable for all times. It is not only that, they have also described the ancient civilized life of Tamil Nadu and the excellence of the Tamil language as very. Among the Sangam poets, the songs of the female poets, have expressed many ideas about the love, hospitality and heroism of the Tamil people. During the Sangam period, female poets also gained importance in the royal court. One can learn that Avvaiyar, with her intelligence and intellectual personality, averted the enmity of the Triumvir kings of Tamil Nadu. Hence, this article scrutinizes the ideologies of the female Sangam poets.*

**Keywords:** Ideology, Status, Sangam, Female Poets, Tamil Culture.

## References

[1] Anitha Selva Rubavathi, J. "Tamil Illakkiyankalil Penniya Kattamaippu." International Journal of Tamil Language and Literary Studies, Volume 2, Spl 3, Volume 1, February, 2020.
[2] Gosalai, Kai, Munaivar. "Sankkala Malir." *Naveena Thamizhayvu*. Sirappithazh, October, 2021.
[3] Govinthan. *Penpar Pulavarkal*. Thenninthiya Saivasitthantha Noorpathippuk Kazhakam, Limited, Tirunelveli, 1956.
[4] Somasuntharanar. *Akananooru* (Kalittuyanai Nirai). Kazhaka Veliyeedu, 1947.
[5] Somasuntharanar. *Kurunthokai*. Kazhaka Veliyidu, 1965.
[6] Pandaranampiyar, *Pulavarum Puravalarum*. Thiruvithancoore-Kocchi Sarkkaral Pirasurikkappaddathu, 1952.
[7] Puliyoorkesikan. *Purananooru*. Pari Nilaiyam, Chennai, 2002.
[8] Muthu, M. Munaivar, "Auvaiyar Padalkalil Penniaip Pathivukal." *Naveena Thamizhayvu*, Sirappithazh, October 2021.
[9] Murukesapandiyan. *Attaitthinkal Avvennilavil*. Kalacchuvadu Pathippakam, 2008.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் கருத்தியல் நிலை

முனைவர் பொ. இரவீந்திரன், உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 629002, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9468-7314
DOI: 10.5281/zenodo.14744549

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியம் தமிழர்களின் வாழ்வினை முழுமையாக எடுத்துரைக்கும் வரலாற்று பெட்டகமாகவும், பண்பாட்டுக் கருவூலமாகவும் இருக்கின்றது. ஏனெனில் சங்க இலக்கியம் தான் பண்டையத் தமிழ் குடிகளின் பெருமையை எடுத்துக் கூறுகின்றது. சங்க இலக்கியம் தமிழர்களின் வாழ்வியலை அகம், புறம் என்றும் அறம், மறம், காதல், இன்பம், இயற்கை என பலத் தகவல்களைப் பகிர்கின்றது. சங்கப் புலவர்கள் தமிழ் குடிகளின் வளமான வாழ்வியல் குறித்து மிகச் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளனர். பண்டையத் தமிழர்களின் வாழ்வியல் எல்லா காலத்திற்கும் ஏற்றவாறு இருப்பதை தங்கள் பாடலில் கருத்தினைப் பதிவு செய்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் தமிழகத்தின் தொன்மையான நாகரீக வாழ்வினையும் தமிழ் மொழியின் சிறப்பினையும் மிகச் சிறப்பாக கூறியுள்ளனர். சங்ககாலப் புலவர்களில் ஆண்பால் புலவர்களுக்கு நிகராகப் பெண்பாற் புலவர்களின் பாடல்களும் தமிழ் மக்களின் அன்பு, விருந்தோம்பல், வீரமென பல கருத்துகளை கூறியுள்ளனர். சங்க காலத்தில் பெண்பாற் புலவர்களும் அரசவையில் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். ஔவையார் தன் ஆளுமையால் இரு நாட்டு அரசர்களின் பகைமையை போக்கியதும், தமிழ் பெண்களின் வீரத்தை காக்கைப் பாடினியார் எடுத்துரைப்பதும் நம்மால் அறிய முடிகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** கருத்தியல், நிலை, சங்கம், பெண் கவிஞர்கள், தமிழ்ப் பண்பாடு.

**முன்னுரை**

தமிழகத்தின் தொன்மையான நாகரிக வாழ்வினையும் தமிழ் மொழியின் சிறப்பினையும் எடுத்துரைப்பது சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க கால மக்களின் வாழ்வியலை ஓவியம் போல சங்க இலக்கியம் வெளிப்படுத்துகின்றது. இந்த இலக்கியம் பற்றி நாம் முழுமையாக அறிந்துக் கொண்டால் சங்க காலத்தில் வாழ்ந்த நம் தமிழ் குடிகளின் வீரம், கருணை, புலமை, போர்த்திறம், விளையாட்டு, காதலென பல கருத்தியல் சார்ந்த வாழ்வினை நாம் அறிந்துக் கொள்ள முடியும். சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் பலர் இருந்துள்ளனர். இவர்கள் ஆண்பாற் புலவர்களுக்கு இணையாக தங்கள் கருத்தினை பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். பெண் மக்களுக்கு அன்றைய காலத்தில் அவர்களுக்கான சமூக மதிப்பும், பெண்ணின் அறிவின் நிலையை ஏற்றுக் கொள்ளும் நிலையும் இருந்துள்ளதை

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

நம்மால் அறிய முடிகின்றது. அப்படிப்பட்ட பெண் ஆளுமைகளின் கருத்தினைப் பதிவுச் செய்யும் நோக்கில் இந்த ஆய்வுக்கட்டுரை அமைய உள்ளது.

**சங்ககால பெண்பாற் புலவர்கள்**

சங்ககால பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை குறித்து பல அறிஞர்களும் பல கருத்துக்களைக் கூறியுள்ளதை நம் இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. "பெண்கவிஞர்களின் எண்ணிக்கையினை உ.வே.சா. 38 எனவும், எஸ். வையாபுரிப்பிள்ளை 30 எனவும், ஔவை துரைசாமிப்பிள்ளை 34 எனவும், புலவர் கா. கோவிந்தன் 27 எனவும், ஔவை து. நடராசன் 41 எனவும், ந. சஞ்சீவி 25 எனவும், தாயம்மாள் அறவாணன் 45 எனவும்" (முருகேசபாண்டியன். ப. 14) குறிப்பிடப்பட்டுள்ளது. சங்ககால பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை குறித்துப் பல கருத்துக்கள் இன்றும் அறிஞர்களுக்கிடையே நிலவி வருகின்றன. "சங்க நூல்களில் காணப்படும் நானூற்று எழுபத்து மூன்று புலவர் பெருமக்களில் நாற்பத்துக்கும் மேற்பட்டோர் பெண்பாலர்கள். இவர்கள் பழந்தமிழ்ச் சமூகத்தில் நிலவிய மக்களின் பண்பாடு, நாகரீகம், பழக்கவழக்கத்திலும் சிறந்துக் காணப்படுகின்றன. சங்கக் காலப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை இன்றளவும் வரையறுத்துக் கூற இயலாத ஒன்றாகவே உள்ளது. உ.வே.சா அவர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் உள்ளனர் எனவும் சங்க பெண்பாற் புலவர்களை பட்டியலிடுகின்றார்." (கோசலை, கை. பக். 430)

**சங்க இலக்கியத்தில் பெண்ணின் நிலை**

தமிழ் மொழியில் உருவாக்கப்பட்ட பண்டையத் தமிழ் இலக்கியங்களில் பெண்கள் குறித்து அதிகமான அளவில் புலவர்கள் தங்கள் கருத்தினைப் பதிவு செய்துள்ளனர். பெண்கள் சங்க காலத்தில் கல்வி அறிவுடன் எல்லா உரிமைகளையும் பெற்று வாழ்ந்துள்ளனர். "பெண்களின் உரிமை சங்க காலத்தில் தடைச் செய்யப்படவில்லை. பெண்கள் கற்று நன்கு புலமைப் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். மேலும் சங்க இலக்கியமானது பெண்களின் நிலையினை பலவாறாக கூறுகின்றது. அஃதாவது,

**பெண் பிறவி இழிவுக்குரியது… என்று யாரும் கருதவில்லை (ஐங்கு., 257)**

**மணக்கொடை (வரதட்சனை) கொடுமை இல்லை… (அகம்., 280)**

**நல்லிற்பாவையன்ன நல்லோற் கணவன் (பதிற்றுப்., 61)**

**மறுவில் கற்பின் வாணுதல் கணவன் (திருமுரு., 6)**

என்றவாறு பெண்ணுக்குப் பெருமை தேடித்தரும் வகையில் சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அனிதா செல்வ ரூபவதி. ப. 27) என்பதை நம்மால் அறிய முடிகின்றது.

**ஔவையார்**

ஔவையார் பாணர் குடியைச் சார்ந்த பெண்பாற் புலவர். இவர் சொல்லின் செல்வி. அரசியல் அறிவுப் படைத்தவர். அதியமானின் அவைக்களப் புலவர். இவர் காலத்தால் வென்று எக்காலத்திற்கும் பொருந்தும் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்னும் நீதி

நூல்களை அருளியவர். இவரது பாக்களின் மூலம் சொல்வளம், பொருள்வளம், இசைவளம் இவற்றை பருகலாம். *நல்வழி* கடவுள் வாழ்த்தில்,

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்து தூதுமணியே நீ யெனக்குச்**
**சங்கத் தமிழ் மூன்றும் தா. (நல்வழி. கடவுள் வாழ்த்து)**

எனப்பாடியவர். ஔவையார் என்னும் பெயருடைய புலவர்கள் பலர் இருந்துள்ளனர். வரலாற்று நோக்கில் பார்க்கும்போது அவர்கள் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்தவர்கள் என அறிய முடிகின்றது. சங்க இலக்கியத்தில் ஔவையார் அகம் புறம் சார்ந்த 59 பாடல்களைப் பாடியுள்ளார். "ஔவை பாடியவையாகப் புறநானூற்றில் 33 பாடல்கள் கிடக்கின்றன. இவர் தமது புலவர்களாக நால்வரைக் குறிக்கிப்பிடுகின்றார். அதியமானை பாட்டுடை தலைவனாகக்கொண்டு 22 பாடல்களும், பொருட்டொழினியைப் பாட்டுடையத் தலைவனாகக்கொண்டு 3 பாடல்களும், நாஞ்சில் வள்ளுவனைப் பற்றி 1 பாடலையையும், மூன்று வேந்தர்களும் ஒருங்கிருந்த போது அவர்கள் குறித்து 1 பாடலும், பொது நிலையில் 6 பாடல்களும் பாடப்பெற்றுள்ளன." (மு.முத்து. ப. 482) ஔவையாரின் அறிவுத்திறனால் இரு அரசர்களின் போரைத் தவிர்த்தமையை காணமுடிகின்றது. காஞ்சிப்புரத்தை அரசாண்ட தொண்டைமானுக்கும், தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் இடையே நட்பை உருவாக்கியவர். அதியமானின் வீரத்தை தன்னுடைய பேச்சாற்றல் மூலம் எடுத்துரைத்ததை,

**இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து**
**கடியுடை வியன்நக ரவ்வே. அவ்வே,**
**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து,**
**கொல்துறைக் குற்றில மாதோ, என்றும்**
**உண் டாயின் பதம் கொடுத்து,**
**இல் லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல்எம் கோமான், வைந் நுதிவேலே. (புறம்., 95)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**அரசே உன்னுடைய ஆயுதங்கள் எல்லாம் எவ்வளவு நேர்த்தியாக வைக்கப்பட்டுள்ளன. புதுமை மாறவில்லையே! நெய்பூசி இருப்பது எவ்வளவு பளபளப்பைக் கொடுக்கிறது! மாலை சூட்டி மயிற்பீலி அணிந்து, காம்பு திருத்தி அடுக்கி வைத்திருப்பது கண்ணைக் கவர்கின்றது. ஆனால் இவ்வாயுதங்கள் பாதுகாப்புடைய அரண்மனையில் பயனின்றிக் கிடக்கின்றன. அவ்வளவுதான்! எம் அரசன் இருக்கின்றானே! பகுத்துண்டு பல்லுயிர்**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**ஓம்பும் பண்பினன், வறிஞர் சுற்றத்திற்குத் தலைவன். அதியமான் அவனது ஆயுதங்களைப் பற்றி என்ன சொல்வது? அவை எப்பொழுதும் பகைவரைக் குத்துதலால் பழுதுப்பட்டுப் புலால் நாற்றம் வீச, செந்நிறந் தாங்கிச் செப்பனிடுதற்காகக் கொல்லனது உலைக் களமாகிய சிறிய இடத்தில் கிடந்து கொண்டே இருக்கின்றன" (பண்டார நம்பியார். ப. 101)**

என்று தொண்டைமானைப் புகழ்வது போல அதியமானின் வீரத்தை எடுத்துரைத்துள்ளார். களவு ஒழுக்கத்தை அறிந்த தாய் தலைவியை இல்லின்கண் செறித்ததை,

**முரிந்த சிலம்பின் நெரிந்த வள்ளியின்**
**புறன் அழிந்து ஒலிவரும் தாழ் இருங் கூந்தல்**
**ஆயமும் அழுங்கின்று யாயும் அஃது அறிந்தனள்**
**அருங் கடி அயர்ந்தனள் காப்பே எந்தை**
**வேற பல் நாட்டுக் கால் தர வந்த**
**பல வினை நாவாய் தோன்றும் பெருந் துறை**
**கலி மடைக் கள்ளின் சாடி அன்ன எம்**
**இள நலம் இற்கடை ஒழியச்**
**சேறும் வாழியோ முதிர்கம் யாமே (நற்றி., 295)**

இப்பாடலடிகள் வழி அறிய முடிகின்றது. இல்லின்கண் செறித்தலால் தலைவியின் இளமையும் அழகும் வீணாவதை தோழி தலைவனிடம் எடுத்துரைத்துள்ளர். ஔவையார் புறப்பாடல்களை மட்டுமன்று அகப்பாடல்களை அழகுற எடுத்தியம்பியதையும் இலக்கியங்கள் நமக்குப் பறைச்சாற்றுகின்றன.

**காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்**

செள்ளையார் என்பது இவரின் இயற்பெயராகும். நல் இவரை சிறப்பித்துக் கூறிய அடைமொழி, குறுந்தொகை பாடலில் ஒன்றில் 'விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே' என்று பாடியமையால் இவரை காக்கை பாடினியார் என்று குறிப்பிட்டுள்ளனர். இவர் தமிழ் பெண்ணின் வீரத்தை,

**நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென் தோள்**
**முளரி மருங்கின் முதியோள் சிறுவன்**
**படை அழிந்து மாறினன் என்று பலர் கூற**
**மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்**
**முலை அறுத்திடுவென், யான் எனச் சினைஇ**
**கொண்ட வாளொடு படு பிணன் பெயரா**
**செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய**
**படுமகன் கிடக்கை காணூஉ**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே (புறம்., 278)**

இப்பாடலடி வழி சுட்டியுள்ளார். நரம்புகள் புடைத்துத் தோன்றிய முதிய தாய் ஒருத்தி, தன் சிறுவன் படையினை விட்டுப் போரிலே புறங்கொடுத்து ஓடினான் என்று அறியாதார் கூறக்கேட்டு மனக்கொதிப்படைந்தாள். அவ்வாறு அவன் புறமுதுகிட்டு ஓடினான் என்றால், அவனுக்குப் பாலூட்டி வளர்த்த என் முலையை அறுத்து எறிவேன் என்று வஞ்சினங்கூறிப் போர்க்களம் சென்றாள். கையில் வாளுடன் போர்களத்திற்குச் சென்று பிணக்குவயலில் தன் மகனை தேடினாள். அப்போது தன் மகன் மார்பிலே புண்பட்டு இறந்து கிடப்பது அந்தப் பெண்ணுக்கு தன் மகனைப் பெற்றப்போது கொண்ட மகிழ்வினைவிடவும் பெரிதாக மகிழ்வுக் கொண்டாள். ஒரு வீரத்தாயின் வீர உணர்வை தன் பாடலின் வழி புலப்படுத்தியுள்ளார்.

**வெள்ளி வீதியார்**

மதுரையில் வெள்ளியம்பல வீதி என்றொரு வீதியுண்டு. அவ்வீதியில் வாழ்ந்தமையால், சிலர் இவர் வெள்ளி வீதியார் என அழைக்கப்பெற்றார் என்பர். வெள்ளி வீதியார் பதின்மூன்று அகத்துறைத் தழுவிய பாடல்களைப் பாடியுள்ளார். தலைவியன் அழகானது பசலை நோயால் அழிவதை,

**கன்றும் உண்ணாது கலத்தினும் படாது**
**நல்ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு,**
**எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது**
**பசலை உணீஇயர் வேண்டும்**
**திதலை அல்குல் என் மாமைக் கவினே (குறுந்., 27)**

இப்பாடல் வழி வெள்ளிவீதியார் எடுத்துரைத்துள்ளார். பசுவின் பாலானது கன்றுக்கும் பயன்படாமல், பாத்திரத்திலும் நிரப்பப்படாமல், வெற்று நிலத்தில் வீணாக வடிந்துச் செல்வதைப் போல் தலைவியின் அழகானது அவளுக்கும் உதவாமல், தலைவனுக்கும் பயன்படாமல் பசலை உண்ணுவதை நினைத்து தலைவி வருந்துகின்றாள். தலைவியின் அழகானது பசலை நோயால் வீணாகுவதை வெள்ளிவீதியார் தன் சொல் வன்மையில் எடுத்துரைத்துள்ளார்.

**பொன்முடியார்**

பொன்முடியார் சேரநாட்டின் ஒரு பகுதியான குட்ட நாட்டின் வடக்குப் பக்கத்தில் பொன்முடி நல்லூர் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் புறநானூற்றில் மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். சங்க இலக்கியப் பாடல்களில் பொன்முடியாரின் பாடல்கள் இன்றியமையாதக் கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. இவரது பாடல்களில் வீரம், தாய்மையின் பெருமை, வாழ்வியல் செய்திகளையும் காணமுடிகின்றது. ஆண்களின் பொறுப்புகளையும், பெண்களின் கடமைகளையும் தெளிவாக எடுத்துரைத்ததை,

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம்., 312)**

இப்பாடல் வரிகள் வழி அறிய முடிகின்றது. தாயின் கடமை குழந்தையைப் பெற்று வளர்த்தல், தந்தையின் கடமை மகனை சான்றோனாக்குதல். ஆண்மகனுக்கு வேல் வடித்துத் தருதல் கொல்லனின் கடமையாகும். நல்ல முறையில் அவனுக்குப் போர்க்கலைகளைக் கற்றுதருதல் வேந்தனின் கடமையாகும். ஒளிர்கின்ற வாளினைப் போர்க்களத்தில் சுழற்றிக் கொண்டு பகைவரை வென்று பகைமன்னர்களின் களிற்றைக் கொன்று மீண்டு வருதல். ஆண் மகனான காளையின் கடமையாகும். பொன்முடியாரின் இப்பாடல் அக்கால சமூக கட்டமைப்பை நமக்குத் தெளிவுப்படுத்துகின்றது.

**அள்ளூர் நன்முல்லையார்**

பாண்டிய நாட்டில் அள்ளூரில் வாழ்ந்தவர் அள்ளூர் நன்முல்லையார். நடுகல் வழிபாட்டை,

**களிறுபொரக் கலங்கு, கழல்முள் வேலி**
**அரிதுஉண் கூவல் அங்குடிச் சீறூர்**
**ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை**
**நடுகல் கைதொழுது பரவும், ஒடியாது**
**விருந்து எதிர் பெறுகதில் யானே: என்னையும்**
**…வேந்தனொடு**
**நாடு தரு விழுப்பகை எய்துக எனவே… (புறம்., 306)**

இப்பாடல் சுட்டுகின்றது. களிறுகள் சிதைத்த முள்வேலியும், மக்கள் அரிதாகவே வந்து உண்ணும் நீர்நிலையும் உடைய சிறிய ஊரில் வாழ்ந்த மறக்குல பெண் போருக்குச் சென்ற தன் கணவன் விரைந்து நாடு திரும்ப முன்னோர்களின் நடுகற்களை வழிபட்டதை அறிய முடிகின்றது. அள்ளூர் நன்முல்லையார் அக்கால சமூகத்தில் நடுகல் வழிபாட்டை மக்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்ததை தன் சொல் ஆளுமையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.அள்ளூரின் சிறப்பினை,

**…செறுநர்**
**களிறுடை அருஞ்சமம் ததைய நூறும்**
**ஒளிறு வாட் தானைக் கொற்றச் செழியன்**
**பிண்ட நெல்லின் அள்ளூர் (அகம்., 46: 11-14)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

இப்பாடலில் பகர்கின்றார். என் தந்தை போன்ற கொற்றச் செழியன் பகைவரின் யானைப் படையினைத் தன் வாளால் வென்றவன். அவன் ஊர் அள்ளூர். அள்ளூரானது பிடிபிடியாக நெற்கதிர் ஈனும் நெல்வயல் கொண்டது என அள்ளூரின் சிறப்பினை தன் பாடலில் வெளிப்படுத்தியது போற்றத்தக்கது.

**வெண்குயத்தியார்**

வெண்குயத்தியார் வெண்ணி என்னும் ஊரில் வாழ்ந்தவர். இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில், நீடாமங்கலத்திற்கு அண்மையில் உள்ளது. வணிகர் குடியில் சிறந்தவர்களுக்கு எட்டிப் பட்டமும், படைவீர்களுள் தலைச்சிறந்தவர்களுக்கு ஏனாதிப் பட்டமும் வழங்குவது போல, வேட்கோவர் குடியில் சிறந்தவர்களுக்கு குயம் என்ற பட்டம் அளித்துள்ளனர். பின்னர் வேட்கோவர் என்ற குடிப்பெயர் மாறி குயவர் என்ற பெயராயிற்று. "குயவர் குடியிலே பிறந்து குன்றாப் புகழ்பெற்ற புலவராய் இருந்தமையால், இவர், குயத்தியார் எனக் குலப் பெயராலேயே அழைக்கப்பெற்றார். அவர் பெயரோடு, அவர் பிறந்து ஊர்ப் பெயரையும் இணைத்து வெண்ணிக் குயத்தியார் என்று அழைத்தனர்.'' (கா. கோவிந்தன்., ப. 104) சேரலாதன் புறப்புண் பெற்றமைக்கு நாணி, வடக்கிருந்து உயிர்விட்டதை,

**நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!**
**களி இயல் யானைக் கரிகால் வளவ!**
**சென்று அமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற**
**வென்றோய், நின்னினும் நல்லன் அன்றே**
**கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை**
**மிகப் புகழ் உலகம் எய்திப்**
**புறப்புண் நாணி, வடக் கிருந்தோனே! ( புறம்., 66 )**

இப்பாடலடிகள் பகர்கின்றன. கரிகாலனுடன் போரிட்ட சேரலாதன், புறப்புண் பெற்றமைக்கு நாணி, வடக்கிலிருந்து உயிர் விட்டார். வடகிருந்து இறந்த சேரலாதன் வென்ற கரிகாலனைவிடவும் நல்லவன் என்ற வரலாற்று உண்மையை வெண்குயத்தியார் திறம்பட இப்பாடலில் கூறியுள்ளார்.

**ஒக்கூர் மாசாத்தியார்**

சிவகங்கை மாவட்டத்தியிள்ள ஊர்களில் ஒன்று ஒக்கூராகம். சாத்தியார் என்பது இவரது இயற்பெயராகும். இது சாத்தனார் என்பதன் பெண்பெயராகும். இவர் தன் ஊரின் பெயரையும் தன் பெயருடன் இணைத்துக் குறிப்பிடப்படுகிறார். இவர் பாடிய பாடல்களில் நமக்குக் கிடைத்தவை எட்டு. அவற்றில் ஒன்று புறத்திணைப்பாடல் மற்றவை அகத்திணைப் பாடலாகும். வினையே ஆடவருக்கு உயிர் என்பதன் அடிப்படையில் தலைவன் பொருள் ஈட்டச் சென்றுள்ளான். கார்காலம் தொடங்கியதால் முல்லைக் கொடியில் அரும்புகள் பூத்துக்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

குலுங்குகின்றன. அவை தன் நிலையைப் பார்த்து நகைப்பது போல் காட்சியளிப்பதாக தலைவி வருந்துவதை,

**இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்**
**இவணும் வாரார், எவணரோ? –என**
**பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகு முகை இலங்கு எயிறு ஆக**
**நகுமே தோழி நறுந்தண் காரே (குறுந்., 126)**

இப்பாடலடிகள் சுட்டுகின்றன. பொருளீட்டுவதை ஆண்கள் முதற்கடமையாக எண்ணுவதையும், இல்லற இன்பத்தை இளமைப் பருவத்தில் நுகர வேண்டும் என, பெண் விரும்புவதையும் அழகுற மாசாத்தியார் எடுத்துரைத்துள்ளார்.

**முடிவுரை**

சங்ககால பெண்பாற் புலவர்கள் தங்களின் கருத்துகளை தாங்கள் படைத்தப் பாடல்கள் வழி வெளிப்படுத்தியுள்ளனர். தாங்கள் கூற விரும்பிய கருத்தை அகம் சார்ந்ததாகவும் புறம் சார்ந்தாகவும் தெளிவாகப் கூறியுள்ளனர். பெண்பாற் புலவர்கள்; அறிவியில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். பெண்பாற் புலவர்களுக்கும் அரசர்கள் முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் அறிவுரையைக் கேட்டு ஆட்சிப் புரிந்துள்ளனர். ஔவையார் தொண்டைமானுக்கும் அதியமானுக்கும் இடையே உருவான பகையை தன் சொல் ஆளுமையால் போக்கியவர். பொன்முடியார் தாய், தந்தை, கொல்லன், அரசன், ஆண்மகன் இவர்களின் கடமைகளைத் தன் பாடல்வழி தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இதன் மூலம் அக்கால சமூக கட்டமைப்புகளை நாம் தெரிந்துக்கொள்ள முடிந்தது. பெண்பாற் புலவர்களின் பாடல் மூலம் தமிழ் பெண்களின் வீரம் பெண்களின் பசலை நோய், அரசர்களின் வீரம், ஆண்களின் கடமைகள் என்பனவற்றை அறிந்துக்கொள்ள முடிந்தது.

**குறிப்புகள்**

[1] அனிதா செல்வ ரூபவதி, ஜெ. "தமிழ் இலக்கியங்களில் பெண்ணிய கட்டமைப்பு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி.2, சிறப்பிதழ் 3, தொகுதி.1, பிப்ரவரி, 2020.

[2] கோசலை, கை, முனைவர். "சங்ககால மகளிர்." *நவீனத் தமிழாய்வு*. சிறப்பிதழ், அக்டோபர், 2021.

[3] கோவிந்தன், *பெண்பாற் புலவர்கள்*. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமி.டெட்., திருநெல்வேலி, 1956.

[4] சோமசுந்தரனார். *அகநானூறு (களிற்றுயானை நிரை)*. கழக வெளியீடு, 1947.

[5] சோமசுந்தரனார். *குறுந்தொகை*. கழகவெளியீடு, 1965.

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

[6] பண்டாரநம்பியார். *புலவரும் புரவலரும்.* திருவிதாகூர்-கொச்சி சர்க்காரால் பிரசுரிக்கப்பட்டது, 1952.

[7] புலியூர்கேசிகன். *புறநானூறு.* பாரி நிலையம், சென்னை, 2002.

[8] முத்து, மூ, முனைவர். "ஔவையார் பாடல்களில் பெண்நிலைப் பதிவுகள்." *நவீனத் தமிழாய்வு,* சிறப்பிதழ், அக்டோபர், 2021.

[9] முருகேசபாண்டியன். *அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2008.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.